
தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 239 | 4 Pages | 27.3.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 239 | 4 பக்கங்கள் | 27.3.2025 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி**
**வலைப்பட்டார் மற்றை யவர்**

**விளக்கம்:**
**முற்றத் துறந்தவரே உயர்ந்த நிலையினர் ஆவர், அவ்வாறு துறக்காத மற்றவர் அறியாமையாகியவலையில்அகப்பட்டவர் ஆவர்.**

## சூடான்: தோரா கிராமத்தில் பயங்கர வான்தாக்குதல் 54 பேர் பலி



கார்டூம், மார்ச்.27
சூடான் நாட்டில் கடந்த2021ம்ஆண்டு ராணுவம் ஆட்சியை கைப்பற்றியது. இந்த ஆட்சியின் தலைவராக ராணுவ தளபதியான ஜெனரல் படக் அல் பர்ஹன் செயல்பட்டு வருகிறார். அவருக்கு அடுத்த நிலையில் ஆட்சியின் துணைத்தலைவராக துணை ராணுவப்படையின் தளபதியான ஜெனரல் முகமது ஹம்டன் டகலோ செயல்பட்டு வருகிறார்.

இதனிடையே, துணை ராணுவத்தின் படைப்பிரிவுகளில் ஒன்றான அதிவிரைவு ஆதரவு படையினரை ராணுவத்துடன் இணைக்க ராணுவ தளபதியான ஜெனரல் படக் அல்பர்ஹன் முயற்சி மேற்கொண்டார். இதற்கு துணை ராணுவப்படையின் அதிவிரைவு ஆதரவு படையினர் தரப்பில் எதிர்ப்பு கிளம்பியது.

இதனால், ராணுவத்திற்கும், துணை ராணுவத்திற்கும் இடையே கடந்த 2023ம் ஆண்டு ஏப்ரல் 15ம் தேதி முதல் கடும் மோதல் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் வடக்கு டார்பூர் மாகாணத்தின் தலைநகரான எல் பாஷருக்கு வடக்கே உள்ள தோரா கிராமத்தில் நேற்று முன்தினம் பயங்கர வான்தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த கொடூர தாக்குதலில் 54பேர்தீயில்கருகி பலியாகினர். மேலும்பலர்படுகாயம்அடைந்தனர். இந்த தாக்குதலை ராணுவம் நடத்தியதாக துணை ராணுவம் குற்றம் சாட்டிய நிலையில் ராணுவம் அதை மறுத்துள்ளது.

## அமெரிக்காவில் ஐபிஎம் நிறுவனம் 9 ஆயிரம் பேரை பணி நீக்கியதாக தகவல்




வாஷிங்டன், மார்ச்.27
அமெரிக்காவின் நியூயார்க் நகரின் அர்மாங்க் நகரை தலைமையிடமாகக் கொண்டு ஐ.பி.எம்., நிறுவனம் செயல்பட்டு வருகிறது. உலகின் முன்னணி நிறுவனமான இங்கு, பல்வேறு நாடுகளை சேர்ந்தலட்சக்கணக்கானோர் வேலை பார்த்து வருகின்றனர். பல்வேறு மென்பொருள் மற்றும் கணினி சார்ந்த நிறுவனங்கள் ஆட் குறைப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட நிலையில், ஐ.பி.எம்., நிறுவனமும் அமெரிக்காவில் 9 ஆயிரம் பேரை பணியில் இருந்து விடுவித்து உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. கலிபோர்னியா, டெக்சாஸ், டல்லாஸ், நியூயார்க் நகரங்களில் உள்ள அலுவலகங்களில் பணியாற்றியோர் நீக்கம் செய்யப்பட்டு உள்ளதாக கூறப்படுகிறது.

'கன்சல்டிங், கார்பரேட் சோஷியல் ரெஸ்பான்சிபிலிட்டி, கிளவுட் உள்கட்டமைப்பு, விற்பனை மற்றும் ஐடி அமைப்பு உள்ளிட்ட துறைகளில்பணியாற்றியவர்கள்தான், இந்தபணிநீக்கநடவடிக்கைக்கு உள்ளாகி உள்ளது தெரியவந்துள்ளது.

## தென் கொரியாவின் சியோலில் சாலையில் திடீரென ஏற்பட்ட பள்ளம் ஒருவர் பலி

சியோல், மார்ச்.27
தென்கொரியாவின்சியோலில் நேற்று மியோங்கில்டோங் பகுதியில் உள்ள ஒரு சந்திப்பில் தோராயமாக 20 மீட்டர் அகலமும் 20 மீட்டர் ஆழமும் கொண்ட பள்ளம் ஒன்று சாலையின் நடுவே திடீரென உருவானது.



இந்த பள்ளத்தில் இருசக்கர வாகனத்தில் சென்ற நபர் ஒருவர் உள்ளே விழுந்ததாகவும், மேலும் அந்த இடத்தைக் கடந்து சென்ற வேன் ஒன்று ஒரு பெண்ணைக் காயப்படுத்தியதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் 30 வயதுடைய இருசக்கர வாகனத்தில் சென்ற நபர் இன்று நண்பகலுக்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்டதாக அவசரகால அதிகாரியான கிம் சாங் சியோப் தெரிவித்துள்ளார். மேலும் உயிரிழந்த அந்த நபர் ஹெல்மெட் மற்றும் மோட்டார் சைக்கிள் பூட்ஸ் அணிந்திருந்ததாகவும், அவரது உடலை மீட்பதற்கு முன்னர் அவரின் மொபைல் போனை மீட்புக்குழுவினர் கண்டுபிடித்ததாகவும் அவர் கூறினார்.

இதனைத்தொடர்ந்து சாலையில் திடீரென ஏற்பட்ட பள்ளம் குறித்து அதிகாரிகள் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# பட்டு வளர்ச்சிப் பணிகளை ஊக்குவிக்கும் வகையில் 11 பட்டு விவசாயிகளுக்கு ரூ.8.25 லட்சம் பரிசுத்தொகை: முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

சென்னை, மார்ச்.27
பட்டுவளர்ச்சித் துறையின் சார்பில் மாநில அளவில் 2 சிறந்த பட்டு விவசாயிகளும், 3 சிறந்த விதைக்கூடு உற்பத்தியாளர்களும், 3 சிறந்த தானியங்கி பட்டு நூற்பாளர்களும், 3 சிறந்த பலமுனை பட்டு நூற்பாளர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இந்த 11 பேருக்கு சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று ரூ.8.25 லட்சம் பரிசுத்தொகையை முதல்வர் மு.க.ஸ்டாலின்வழங்கி சிறப்பித்தார். மாநில அளவில் தேர்வு செய்யப்பட்ட சிறந்த பட்டு விவசாயிக்கான முதல் பரிசாக ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலை தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த ஜேக்கப், 3ம்பரிசாக50ஆயிரம் ரூபாய்க்கான காசோலை தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த அருள்குமரனுக்கும்,

மாநில அளவில் சிறந்த விதைக்கூடு உற்பத்தியாளருக்கான முதல் பரிசாக ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலை




கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த மஞ்சுநாதா, 2ம் பரிசாக 75 ஆயிரம் ரூபாய்க்கானகாசோலைகிருஷ்ணகிரி மாவட்டத்தைச் நாகராஜ், 3ம் பரிசாக 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த சாந்த மூர்த்திக்கும், மாநில அளவில் சிறந்த தானியங்கி பட்டு நூற்பாளருக்கான முதல் பரிசாக ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலை கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த முகமது மதீனுல்லாவுக்கும், 2ம் பரிசாக 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த சேகர், 3ம் பரிசாக 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த சுபத்ராவுக்கும்,

மாநில அளவில் சிறந்த பலமுனை பட்டு நூற்பாளருக்கான முதல் பரிசாக ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலை தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த பிரகாஷ், 2ம் பரிசாக 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த வேதவள்ளி, 3ம் பரிசாக 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த ரொசாரியோ லாசர் என மொத்தம் 8 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் பரிசுத் தொகைக்கான காசோலைகளை 11 பட்டு விவசாயிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்தா.மோ.அன்பரசன், தலைமைச்செயலாளர்முருகானந்தம், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறைச் செயலாளர் அமுதவல்லி, பட்டுவளர்ச்சித் துறை இயக்குநர் சாந்தி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பிட் வச்சிருக்கியா? சோதிப்பது போல பாலியல் தொல்லை... தேர்வெழுதி கண்ணீருடன் வந்த மாணவிகள்.. திருப்பூரில் பயங்கரம்.!

தமிழ்நாடு மாநில பள்ளிக் கல்வித்துறையின் கீழ் செயல்படும் பள்ளிகளில், நேற்றுடன் பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கான அரசு பொதுத்தேர்வுகள் நிறைவுபெற்றன இதனால் மாணவ மாணவிகள் பலரும் மகிழ்ச்சி அடைந்தனர். இதனிடையே, திருப்பூர் மாவட்டத்தில் உள்ள வெங்கமேடு பகுதியில் செயல்பட்டு வரும் அரசு மேல்நிலைப்பள்ளியில், மாணவமாணவிகள், தனியார் பள்ளி மாணாக்கர்கள் தேர்வெழுதினர்.

வகுப்பு ஒன்றில் தனியார் பள்ளி மாணவிகள் 6 பேர், 5 மாணவர்கள்என11பேர்மட்டும் தேர்வெழுதி இருந்தனர். தேர்தல் கண்காணிப்பாளராக தனியார் பள்ளி ஆசிரியர் சம்பத்குமார் நியமனம் செய்யப்பட்டு இருந்தார். இவர் மாணவிகள் பிட் ஏதும் வைத்துள்ளனரா? என சோதிப்பது போல சில்மிஷம் செய்து இருக்கிறார்.

ஆசிரியர் கொடுத்த பாலியல் தொல்லையை தாங்கிக்கொண்டு தேர்வெழுதிய மாணவிகள், தேர்வு நேரம் முடிந்ததும் வகுப்பறையில் இருந்து வெளியேறி, பெற்றோர் மற்றும் பிற ஆசிரியர்களிடம் பாலியல் சீண்டல் குறித்து தகவல் தெரிவித்தனர். இதனைக்கேட்டு அதிர்ச்சியடைந்த பள்ளி நிர்வாகம், அனுப்பர்பாளையம் காவல் நிலையத்துக்கு தகவல் தெரிவித்தனர்.

விரைந்து வந்த அதிகாரிகள் மாணவிகளிடம் விசாரணை நடத்தியதில், ஆசிரியர் தேர்வு தொடங்கியதில் இருந்து பாலியல் தொல்லை கொடுத்ததும் அம்பலமானது. இதனையடுத்து, அம்மாபாளையம், இராமகிருஷ்ணா வித்யாலயா மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியராக வேலை பார்த்து வரும் சம்பத் குமாரை காவல்துறையினர் காவல் நிலையம் அழைத்துச் சென்று விசாரித்தனர்.

அப்போது, திருமணமாகி குடும்பத்துடன் வசித்து வரும் சம்பத் மாணவிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்தது உறுதியாகவே, காவல்துறையினர் போக்ஸோவில் வழக்குப்பதிவு செய்து சம்பத் குமாரை கைது செய்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.




கோடை வெயிலில் பணி செய்து வரும் போக்குவரத்து காவல் ஆளிநர்களுக்கு குளிரூட்டும் கண்ணாடிகளை சென்னை பெருநகர காவல் ஆணையாளர் வழங்கினார்.





சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே அமராவதி இறை இரக்க ஆண்டவர் ஆலயத்தில்ஒரு நாள் தியானம் நடைபெற்றது மறை மாவட்ட பொருளாளர் முனைவர் அருண் வழிநடத்தினர் இதில் ஏராளமான இறை மக்கள் கலந்துகொண்டு இறை அனுபவம் பெற்றனர் ஏற்பாடுகளை பங்கு தந்தை முனைவர் மிக்கேல் பங்கு பேரவையினர் செய்தனர்

## மாவட்ட உணவு பாதுகாப்பு துறை சார்பாக காரைக்குடியில் புகையிலை விழிப்புணர்வு தெருக்கூத்து நிகழ்ச்சி






சிவகங்கை மாவட்டம் உணவு பாதுகாப்பு துறை சார்பாக காரைக்குடி புதிய பேருந்து நிலையம் அருகில் புகையிலை விழிப்புணர்வு குறித்து தெருக்கூத்து நடைபெற்றது

இந்த விழிப்புணர்வு கோவிலூர் நாச்சியப்பா சுவாமிகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்கள்குட்கா பான் மசாலா இவற்றால் ஏற்படும் பாதிப்புகளை குறித்து தெருக்கூத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர் இந்த நிகழ்ச்சி காரைக்குடி வட்டாட்சியர் ராஜா துவங்கி வைத்தார் காரைக்குடி துணை கண்காணிப்பாளர் பார்த்திபன் பாராட்டி வாழ்த்துரை வழங்கினார் சிவகங்கை மாவட்ட உணவு பாதுகாப்புத்துறை அபிநயா சிவகுமார் கல்லூரி முதல்வர் சந்திரமோகன் கணியியல் துறைத்தலைவர் முனைவர் கலா காசிநாதன் விசுவல் கம்யூனிகேஷன் துறைத்தலைவர் பாண்டியராஜ் மற்றும் மாணவ மாணவிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்

## ஈரோடு அருகே கோபியில் கையும் களவுமாக சிக்கிய ஆபீசர்.. ஆடிப்போன அரசு ஊழியர்கள்

அதுவும் வயதான காலத்தில் சிக்கினால், ஓய்வு காலத்திற்கு பிறகு சிறையில் தான் காலத்தை கழிக்க வேண்டியதிருக்கும். ஏனெனில் லஞ்சம் வாங்கி கைதாகும் அரசு ஊழியர்களுக்கு 3 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படுகிறது. புதிய கட்டிடம் கட்ட அனுமதி சான்று வழங்க ரூ.30 ஆயிரம் லஞ்சம் வாங்கியதாக கோபி நகராட்சி உதவியாளர் சுப்பிமணியன் கையும் களவுமாக சிக்கியுள்ளார்.

அரசு ஊழியர்கள் லஞ்சம் கேட்டால் மாவட்டங்களில் உள்ள லஞ்ச ஒழிப்பு போலீசில் ஆதாரத்துடன் புகார் அளிக்கலாம்.. அப்படி புகார் அளித்தால் டிஎஸ்பி தலைமையிலான அதிகாரிகள், புகாரின் உண்மை தன்மையை உறுதி செய்த பின்னர், அவர்கள் கேட்டுகும் லஞ்சப்பணத்தை ரசாயனம் தடவிய நோட்டுகளாக கொடுத்து அனுப்பி வைப்பார்கள். புகார் தந்த நபர் அந்த பணத்தை குறிப்பிட்ட அதிகாரியிடம் அல்லது அவர் கூறும் நபரிடம் அளிப்பார். அப்போது மறைந்திருக்கும் லஞ்ச ஒழிப்பு போலீசார் கையும் களவுமாக பிடித்து கைது செய்வார்கள்.. அப்படித்தான் ஈரோடு மாவட்டம் கோபியில் அரசு அதிகாரி சிக்கியுள்ளார்.






திருப்பூர் மாவட்டம் பெருமாநல்லூரை சேர்ந்த 48 வயதாகும் சுப்பிரமணியம் என்பவர், ஈரோடு மாவட்டம் கோபி நகராட்சி அலுவலகத்தில் நகரமைப்பு பிரிவில் கடந்த 10 ஆண்டுகளாக உதவியாளராக வேலை செய்து வருகிறார். இந்த நிலையில் கோபியை சேர்ந்த சிவில் என்ஜினியரான வருண் என்பவர் புதிய கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி சான்று கேட்டு சுப்பிரமணியத்திடம் விண்ணப்பித்து இருந்தார். அதற்கான கட்டிட வரைபடத்தையும் ஒப்படைத்திருந்தார்.

அதைப்பெற்றுக் கொண்ட நகரமைப்பு பிரிவு அதிகாரி சுப்பிரமணியம் அனுமதி சான்று வழங்க ரூ.40 ஆயிரம் லஞ்சம் தர வேண்டும் என்று வருணிடம் கேட்டதாக தெரிகிறது. அதற்கு வருண் மறுத்துள்ளார். இறுதியில் ரூ.30 ஆயிரம் லஞ்சம் தந்தால்தான் சான்று தர முடியும் என்று சுப்பிரமணியம் உறுதியாக கூறினாராம். ஆனால் லஞ்சம் கொடுக்க விரும்பாத வருண் இதுகுறித்து ஈரோடு கருங்கல்பாளையத்தில் உள்ள லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகத்தில் புகார் கொடுத்தார். இதையடுத்து லஞ்சஒழிப்பு போலீசார் லஞ்சம் கேட்ட சுப்பிரமணியத்தை கையும் களவுமாக பிடிக்க முடிவு செய்தார்கள். அதன்படி ரசாயனம் தடவிய ரூ.30 ஆயிரத்தை வருணிடம் கொடுத்து சுப்பிரமணியத்திடம் தரச் சொல்லி அனுப்பியுள்ளார்கள், அதன்படி நேற்று காலை கோபி நகராட்சி அலுவலகத்துக்கு சென்ற வருண் ரசாயனம் தடவிய ரூ.30 ஆயிரத்தை சுப்பிரமணியத்திடம் கொடுத்ததாக கூறப்படுகிறது.

அப்போது அங்கு மறைந்திருந்த லஞ்ச ஒழிப்புத் துறை கூடுதல் டிஎஸ்பி ஆறுமுகம் தலைமையிலான போலீசார் சுப்பிரமணியத்தை சுற்றிவளைத்து கையும் களவுமாக பிடித்து கைது செய்தனர். அவரிடமிருந்து ரூ.30 ஆயிரமும் பறிமுதல் செய்யப்பட்டது. இந்த சம்பவம் கோபி நகராட்சி அலுவலகத்தில் நேற்று அதிகாரி கையும் களவுமாக சிக்கிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# சென்னை வி.ஐ.டி பல்கலைக்கழக தின விழா மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கல்விக்கு 6% செலவிட வேண்டும்: விஸ்வநாதன் கோரிக்கை




சென்னை, மார்ச்.27
சென்னை விஐடி பல்கலைக்கழக தின விழா நேற்று கொண்டாடப்பட்டது. விழாவுக்கு விஐடியின் நிறுவனரும், வேந்தருமான கோ.விசுவநாதன் தலைமை தாங்கினார். விஐடியின் துணை தலைவர் ஜி.வி.செல்வம் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக ஆஸ்திரேலிய துணை தூதரக அதிகாரி கேத்ரினா நேப், டிசிஎஸ் நிறுவனத்தின் தலைமை மனிதவள மேம்பாட்டு அதிகாரி (நியமிக்கபட்ட) சுதீப் குன்னுமால் ஆகியோர் பங்கேற்றனர். சென்னை விஐடியின் இணை துணைவேந்தர் டி.தியாகராஜன் ஆண்டறிக்கையை சமர்ப்பித்தார்.

சிறப்பு விருந்தினர் கேத்ரினா நேப் பேசுகையில், “இந்தியாவும், ஆஸ்திரேலியாவும் கல்வியில் வலுவான தொடர்பை கொண்டுள்ளன. இதற்காக இரு நாட்டு அரசுகளும் பல்வேறு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன. அதன்படி, ஆயிரக்கணக்கான இந்திய மாணவர்கள் ஆஸ்திரேலியாவுக்கு ஒவ்வொரு ஆண்டும் கல்வி பயில வருகின்றனர். தற்போது, 1 லட்சம் இந்திய மாணவர்கள் கல்வி பயின்று கொண்டிருக்கின்றனர்” என்றார்.

விஐடி வேந்தர் கோ.விசுவநாதன் பேசும்போது, “இந்தியாவில் உயர்கல்விக்கான மொத்த சேர்க்கை விகிதம் 28 சதவிகிதம். ஆனால், பல நாடுகளில் 70 முதல் 80 சதவிகிதமாக உள்ளது. ஆஸ்திரேலியா மற்றும் தென் கொரியாவில் 100 சதவிகிதமாக உள்ளது. அந்த நாடுகள் எவ்வாறு உயர்கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன என்று நாம் கற்க வேண்டும். அந்நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவிகிதத்துக்கும் அதிகமாக கல்விக்காக செலவு செய்கின்றனர்.

இந்தியா தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 சதவிகிதத்துக்கு அதிகமாக கல்விக்காக செலவு செய்ய வேண்டும் என்று 60 ஆண்டுகளாக விரும்புகிறோம். நடப்பு நிதியாண்டில் ரூ.50 லட்சம் கோடி நிதிநிலை அறிக்கையில் 2.5 சதவிகிதம் மட்டும் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது'' என்றார்.

இதனையடுத்து, வகுப்பில் சிறந்து விளங்கிய மாணவ – மாணவிகள் விருதுகள் மற்றும் பரிசுத்தொகை வழங்கி கவுரவிக்கப்பட்டனர். விழாவில், சென்னை வி.ஐ.டியின் கூடுதல் பதிவாளர் பி.கே.மனோகரன், பேராசிரியர்கள், ஏராளமான மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# 6 மண்டை ஓடுகளுடன் மயானத்தில் மாந்திரீக பூஜை செய்த மர்ம கும்பல்



சேந்தமங்கலம், மார்ச்.27
நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் ஒன்றியம், கண்ணூர்பட்டி ஊராட்சி கோவிந்தம்பாளையம் கிராமத்தில், நேற்று முன்தினம் இரவு, வயது முதிர்வு காரணமாக மூதாட்டி ஒருவர் இறந்தார். அவரை அடக்கம் செய்வதற்காக, நேற்று காலை அவரது உறவினர்கள் கோவிந்தம்பாளையத்தில் உள்ள மயானத்திற்கு சென்று, குழி தோண்டும் பணியில் ஈடுபட்டனர். அப்போது மயானத்தின் ஒரு பகுதியில், எரிந்த நிலையில் 6 மண்டை ஓடுகள் கிடப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

இதுகுறித்து ஊர் மக்களுக்கு தகவல் பரவியது. பொதுமக்கள் அங்கு சென்று பார்த்தபோது, எரிந்த மண்டை ஓடுகள் அருகில் பூஜை தட்டு, மாந்திரீக செப்பு தகடுகள், செருப்பு உள்ளிட்டவை எரிக்கப்பட்டு கிடந்தது. விஏஓ கலைச்செல்வி, தகவலின்படி புதுச்சத்திரம் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினர். விசாரணையில், கடந்த 10 நாட்களுக்கு முன்பு மயானத்தில் மந்திரவாதிகள் மாந்திரீக பூஜை நடத்தி இருப்பது தெரியவந்தது. மண்டை ஓடுகள் எங்கிருந்து கொண்டு வரப்பட்டது என்பது குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதையடுத்து, சேலத்தில் இருந்து தடயவியல் பிரிவு போலீசார் வரவழைக்கப்பட்டு, எரிந்த நிலையில் கிடந்த மண்டை ஓடுகளில் இருந்து தடயங்கள் சேகரிக்கப்பட்டு ஆய்வுக்கு அனுப்பப்பட்டது.

மேலும், மயானம் செல்லும் வழியில் உள்ள குடியிருப்புகளில் வைக்கப்பட்டுள்ள சிசிடிவி கேமராக்களை ஆய்வு செய்ய போலீசார் முடிவு செய்துள்ளனர். அதில் மர்ம நபர்கள் நடமாட்டம் இருக்கிறதா எனவும், உள்ளூர் மக்கள் தோஷம் கழிப்பதற்காக, மந்திரவாதிகளை அழைத்து வந்து இது போன்ற மயான பூஜையில் ஈடுபட்டனரா என்ற கோணத்திலும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பிளஸ் 2 தேர்வு எழுத படிக்கட்டை பிடித்தபடி ஓடிய மாணவி பஸ்சை நிறுத்தாமல் சென்ற கண்டக்டர் அதிரடி டிஸ்மிஸ்: டிரைவர் சஸ்பெண்ட்



ஆலங்காயம், மார்ச்.27
பிளஸ் 2 தேர்வு எழுத மாணவி காத்திருந்த நிலையில், பஸ்சை நிறுத்தாமல் சென்ற அரசு பஸ் டிரைவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டார். கண்டக்டர் பணி நீக்கம் செய்யப்பட்டார். திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடியில் இருந்து நேதாஜி நகர், கொத்தக்கோட்டை, நிம்மியம்பட்டு வழியாக ஆலங்காயத்திற்கு தடம் எண் 1 ‘சி’ என்ற அரசு டவுன் பஸ் இயங்கி வருகிறது. இந்த டவுன் பஸ் வழக்கம்போல் நேற்று காலை வாணியம்பாடி பஸ் நிலையத்தில் இருந்து பயணிகளுடன் புறப்பட்டது.

ஆனால், வழியில் பெரும்பாலான நிறுத்தங்களில் நிற்காமல் சென்றுள்ளது. இதனால் பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகினர். அதேபோல், கொத்தகோட்டை பஸ் நிறுத்தத்திலும் பஸ் நிற்காமல் சென்றது.

அப்போது, அங்கு நிம்மியம்பட்டில் உள்ள பள்ளியில் பிளஸ் 2 இறுதி தேர்வு எழுத செல்வதற்காக காத்திருந்த மாணவி ஒருவர், பஸ் நிற்காமல் சென்றதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். பஸ்சை நிறுத்தும்படி கூறியபடியே மாணவி பஸ்சை பிடித்தபடி தொடர்ந்து ஓடினார்.

இதை கண்ட அக்கம் பக்கத்தினர் கூச்சலிட்டதை தொடர்ந்து பஸ் நிறுத்தப்பட்டது. பின்னர், பொதுமக்கள், பயணிகள் அந்த பஸ் டிரைவர் மற்றும் கண்டக்டரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து, அந்த மாணவியை பஸ்சில் ஏற்றி சென்றனர். நிற்காமல் சென்ற பஸ்சை பிடிக்க மாணவி ஓடிச் செல்லும் காட்சி சமூக வலைதளங்களில் வைரலானது. இதுபற்றி தகவலறிந்த போக்குவரத்து துறை பொது மேலாளர் உத்தரவின்பேரில் பஸ் டிரைவர் முனிராஜை சஸ்பெண்ட் செய்து ஆம்பூர் போக்குவரத்து பணிமனை மேலாளர் கணேசன் நடவடிக்கை எடுத்துள்ளார். மேலும், தற்காலிக கண்டக்டரான அசோக்குமார் பணி நீக்கம் செய்யப்பட்டார்.

# சிவகங்கை ஜிஹெச்சில் பெண் மருத்துவர் மீது மர்ம நபர் தாக்குதல்: பணி புறக்கணித்து போராட்டம்



ற்சிவகங்கை, மார்ச்.27
சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 100 மாணவ, மாணவிகள் பயிற்சி மருத்துவர்களாக உள்ளனர். இவர்கள் அனைவரும் கல்லூரிக்கு பின்புறம் உள்ள விடுதியில் தங்கியுள்ளனர். நேற்று முன்தினம் இரவு 11 மணி அளவில் விடுதிக்குச் சென்ற பயிற்சி பெண் மருத்துவரை பின் தொடர்ந்து வந்த மர்ம நபர் ஒருவர் முகத்தில் துணியை போர்த்தி சரமாரியாக தாக்கியுள்ளார். சத்தம் கேட்டு சக மருத்துவ மாணவர்கள் ஓடி வந்தனர்.

உடனே மர்ம நபர் அங்கிருந்து தப்பியோடினார். டீன் சத்தியபாமா அளித்த புகாரின் அடிப்படையில், எஸ்பி ஆசிஷ் ராவத் மற்றும் போலீசார்,

பெண் பயிற்சி மருத்துவரை தாக்கிய மர்ம நபர் யார், வழிப்பறிக்காக வந்த நபரா அல்லது தனிப்பட்ட காரணமாக தாக்குதல் நடத்தினாரா என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் பயிற்சி மருத்துவர்கள் நேற்று பணி புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# ஆன்லைன் சூதாட்டம் பணம் இழந்தவர் தூக்கிட்டு தற்கொலை



நத்தம், மார்ச்.27
திண்டுக்கல் மாவட்டம், நத்தம் அருகே செந்துறை குரும்பபட்டி அண்ணா நகரை சேர்ந்தவர் மகேந்திரன் (32). பால் வியாபாரி. சில மாதங்களாக வியாபாரத்தில் கிடைத்த பணத்தில் ஆன்லைன் சூதாட்டம் விளையாடி வந்துள்ளார். தொடர்ந்து பணத்தை இழந்ததால் அதனை மீட்க கடன் வாங்கி விளையாடி வந்துள்ளார். இதில் ரூ.2 லட்சத்திற்கு மேல் இழந்ததாக கூறப்படுகிறது. இதனால் மன உளைச்சலில் இருந்த மகேந்திரன், கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு வீட்டை விட்டு வெளியே சென்றார். மீண்டும் வீடு திரும்பவில்லை. குடும்பத்தினர் பல இடங்களில் தேடியும் கிடைக்காததால் நத்தம் போலீசில் புகார் அளித்துள்ளனர். இந்நிலையில் நேற்று செந்துறை அருகே பாலக்குட்டு என்ற மலை உச்சியில் உள்ள மரத்தில் தூக்கில் அழுகிய நிலையில் சடலம் கிடப்பதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. போலீசார் சென்று பார்த்தபோது, அது மகேந்திரன் என்பது தெரியவந்தது.

# யாருடன் கூட்டணி? பிரேமலதா விஜயகாந்த் பதில்

காவேரிப்பாக்கம், மார்ச்.27
ராணிப்பேட்டை மாவட்டம், காவேரிப்பாக்கம் அடுத்த திருப்பாற்கடல் கிராமத்தில் தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் நேற்று நிருபர்களிடம் கூறுகையில், ‘நாடாளுமன்ற தொகுதி மறுவரையறையால் தமிழகத்தில் உள்ள 39 தொகுதிகளில் ஒரு தொகுதி குறைந்தால் கூட தேமுதிக ஒருபோதும் ஏற்காது. சட்டமன்ற தேர்தலுக்கு இன்னும் ஓராண்டு காலம் உள்ளது. எனவே, தேர்தல் கூட்டணி குறித்து அதிகார பூர்வமாக பின்னர் தெரிவிக்கப்படும்’ என்றார்.

# மதுரையில் டைடல் பார்க் அமைப்பதற்கு தடையில்லை: எதிர்த்த மனுவை ஐகோர்ட் தள்ளுபடி



மதுரை, மார்ச்.27
மதுரையைச் சேர்ந்த மயில்சாமி, ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனுவில், ‘‘நீர்நிலைகளில் எந்த ஒரு கட்டுமானமும் கூடாது என நீதிமன்றம் ஏற்கனவே உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில் மதுரை வண்டியூர் கண்மாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் தகவல் தொழில்நுட்ப பூங்கா (டைடல் பார்க்) அமைக்கும் பணி நடைபெறுகிறது. இது நீதிமன்ற உத்தரவை மீறும் செயலாகும். எனவே, தகவல் தொழில்நுட்ப பூங்கா அமைக்க தடை விதித்து உத்தரவிட வேண்டும்'' என்று கூறியிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், பி.புகழேந்தி ஆகியோர், ‘‘வண்டியூர் கண்மாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் தகவல் தொழில்நுட்ப பூங்காவிற்கான ஆரம்ப கட்ட பணிகள் நடைபெற்று வருவதாக கூறுவது சரி தான். நீர்ப்பிடிப்பு பகுதிகளில் எந்த ஒரு கட்டுமான பணிகளும் மேற்கொள்ள கூடாது என ஏற்கனவே நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஆனால், இந்த வழக்கை பொறுத்தவரை வேறு உத்தரவு போட முடியாது. சம்பந்தப்பட்ட

இடத்தை மதுரை மாநகராட்சி கடந்த 1981ம் ஆண்டு உரக்கிடங்கு தயாரிப்பதற்கான இடமாக மாற்றி மறு வரையறை செய்துள்ளது. தற்போது பொதுமக்கள் பயன்பாட்டிற்கான இடமாக உள்ளது. எனவே, இந்த இடத்தில் தகவல் தொழில்நுட்ப பூங்கா அமைப்பதற்கு தடை விதிக்க முடியாது. மனு தள்ளுபடி செய்யப்படுகிறது'' என உத்தரவிட்டனர்.

# தமிழக - இலங்கை மீனவர்கள் வவுனியாவில் ஆலோசனை: பல்வேறு பிரச்னைகள் குறித்து முக்கிய பேச்சு

ராமேஸ்வரம், மார்ச்.27
இலங்கை வவுனியாவில் தமிழக மற்றும் இலங்கை மீனவர் பிரதிநிதிகளின் ஆலோசனை கூட்டம் இன்று நடைபெறுகிறது. இலங்கை கடற்படை இதுவரை இல்லாத அளவுக்கு தமிழக மீனவர்களின் படகுகளை பறிமுதல் செய்வது அதிகரித்துள்ளது. மேலும் மீனவர்களுக்கு கடுமையான சிறை தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படுவதால், தமிழக மீனவர்கள் மத்தியில் அச்சத்தையும், பதட்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் இலங்கையில் உள்ள வவுனியாவில் இன்று தமிழக மற்றும் இலங்கை மீனவர்களின் ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ராமேஸ்வரம் மீனவப் பிரதிநிதிகள் ஜேசுராஜா, ஆல்வின், சகாயம், ஜஸ்டின், ஜெர்மனியஸ், சுரேஷ் (நாகை மாவட்டம்) ஆகியோர் கொண்ட 6 பேர் குழு நேற்று விமானம் மூலமாக புறப்பட்டு இலங்கை சென்றடைந்தனர். இலங்கை தரப்பில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார்,

கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த மீனவ சங்க பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

# தீவிரமடையும் கொடநாடு கொலை, கொள்ளை வழக்கு ஜெயலலிதா வளர்ப்பு மகன் சுதாகரனுக்கு சிபிசிஐடி சம்மன்: நாளை ஆஜராக உத்தரவு



கோவை, மார்ச்.27
கொடநாடு கொலை, கொள்ளை வழக்கில் ஜெயலலிதா வளர்ப்பு மகன் சுதாகரனை நாளை கோவையில் உள்ள சிபிசிஐடி அலுவலகத்தில் ஆஜராகுமாறு சிபிசிஐடி போலீசார் சம்மன் அனுப்பி உள்ளனர். நீலகிரி மாவட்டம் கொடநாடு கொலை, கொள்ளை வழக்கு தொடர்பாக சோலூர் மட்டம் போலீசார் வழக்கு பதிவு செய்தனர். கொள்ளை கும்பலை சேர்ந்த சேலம் ஆத்தூர் கனகராஜ் சாலை விபத்தில் உயிரிழந்தார். இந்த கொலை மற்றும் கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்ட சயான், வாளையார் மனோஜ் உட்பட கேரளாவை சேர்ந்த 10 பேர் கைது செய்யப்பட்டனர். இவ்வழக்கு ஊட்டியில் உள்ள மாவட்ட நீதிமன்றத்தில் நடந்து வருகிறது.

சாலை விபத்தில் உயிரிழந்த கனகராஜின் சகோதரர் தனபால், கனராஜின் மனைவி, மைத்துனர், கொடநாடு எஸ்டேட் மேலாளர் நடராஜன், சசிகலா, முன்னாள் எம்எல்ஏ ஆறுகுட்டி உட்பட 316 பேரிடம் தனிப்படை போலீசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். இந்நிலையில், இவ்வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றம் செய்யப்பட்டது. மீண்டும் குற்றவாளிகள் மற்றும் பல்வேறு சாட்சிகளிடம் சிபிசிஐடி போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

ஜெயலலிதாவின் முதன்மை பாதுகாப்பு அதிகாரியாக இருந்த ஏடிஎஸ்பிக்கள் வீரபெருமாள், பெருமாள்சாமி ஆகியோரிடம் கடந்த வாரம் கோவை சிபிசிஐடி அலுவலகத்தில் விசாரணை நடந்தது. அவர்கள் அளித்த தகவலின்படி பலரிடம் விசாரணை நடத்த திட்டமிட்டிருக்கின்றனர். இந்நிலையில், ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் சுதாகரனுக்கு கோவை சிபிசிஐடி போலீசார் சம்மன் அனுப்பி உள்ளனர். அதில், நாளை (வியாழக்கிழமை) கோவை காந்திபுரத்தில் உள்ள சிபிசிஐடி அலுவலகத்தில் ஆஜராகுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சிபிசிஐடி அதிகாரிகள் கூறும்போது, ‘‘கடந்த 2022க்கு முன்னர் இந்த வழக்கை தனிப்படை போலீசார் கையாண்டு வந்தனர். அப்போது யாரிடம் எல்லாம் விசாரிக்க வேண்டி உள்ளது என பட்டியல் தயாரித்து அவர்களிடம் விசாரிக்க அனுமதி கோரி கோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தனர். கோர்ட் அனுமதி அளித்ததின் பேரிலேயே, தற்போது ஜெயலலிதாவின் முன்னாள் பாதுகாப்பு அதிகாரிகள், ஜெயலலிதா வளர்ப்பு மகன் சுதாகரன் என ஒவ்வொருவருக்கும் சம்மன் அனுப்பி விசாரிக்கப்பட்டு வருகிறது.

சுதாகரனிடம் சிபிசிஐடி விசாரிப்பது இதுவே முதல் முறை'' என்றனர். கொடநாடு கொலை, கொள்ளை வழக்கு விசாரணை தற்போது தீவிரமடைந்துள்ளது. ஜெயலலிதா பிரமாண்டமாக திருமணம் செய்து வைத்த வளர்ப்பு மகனிடமும் சிபிசிஐடி போலீசார் விசாரணை நடத்த உள்ளனர். தொடர்ந்து ஜெயலலிதாவுக்கு மிகவும் நெருக்கமாக இருந்தவர்களிடமும் விசாரணை நடத்தவும் சிபிசிஐடி போலீசார் முடிவு செய்துள்ளனர். இது அதிமுக நிர்வாகிகள், தொண்டர்கள் இடையே பீதியை கிளப்பியுள்ளது.

# தமிழகத்தில் 153 கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மை அந்தஸ்து சான்றிதழ் வழங்க ஒப்புதல்: அரசு அறிவிப்பு




சென்னை, மார்ச்.27
தமிழகத்தில் 153 கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மை அந்தஸ்து சான்றிதழ்கள் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. இதுகுறித்து பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை: சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் சிறுபான்மையினர் அந்தஸ்து சான்றிதழ் பெறுவதை எளிதாக்கி விரைவாக வழங்கும் வகையில் 2023ம் ஆண்டு முதல் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மூலம் தலைமை செயலாளர் தலைமையில் அதிகாரம் அளிக்கப் பெற்ற குழுவின் ஒப்புதல் பெற்று சிறுபான்மையினர் அந்தஸ்து சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.

2024ம் ஆண்டு முதல் மதவழி சிறுபான்மையின கல்வி நிறுவனங்களுக்கு நிரந்தர சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 11ம் தேதி நடைபெற்ற அதிகாரம் அளிக்கப் பெற்ற குழுவின் 7வது கூட்டத்தில் 160 கல்வி நிறுவனங்களின் விண்ணப்பங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதில், 153 கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மை அந்தஸ்து சான்றிதழ்கள் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்த துறை மூலம் இது வரை 312 கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மையினர் அந்தஸ்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. அதில் 246 நிரந்தர அந்தஸ்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு முழுவதும் 8 ஐபிஎஸ் அதிகாரிகள் உட்பட 10 பேர் பணியிட மாற்றம்: உள்துறை செயலாளர் தீரஜ்குமார் உத்தரவு



சென்னை, மார்ச்.27

தமிழகம் முழுவதும் 8 ஐபிஎஸ் அதிகாரிகள் உட்பட 10 பேரை பணியிட மாற்றம் செய்து உள்துறை செயலாளர்தீரஜ்குமார் உத்தரவிட்டுள்ளார். இதுகுறித்து தமிழ்நாடு உள்துறை செயலாளர் தீரஜ்குமார் பிறப்பித்துள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது: ராமநாதபுரம் சரக டிஐஜியாக இருந்த அவினவ் குமார் மதுரை சரக டிஐஜியாகவும், திருநெல்வேலி சரக டிஐஜியாக இருந்த மூர்த்தி ராமநாதபுரம் சரக டிஐஜியாகவும், திருநெல்வேலி போலீஸ் கமிஷனராக இருந்த சந்தோஷ் ஹதிமானி கூடுதல் பொறுப்பாக திருநெல்வேலி சரக டிஐஜியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோல், சென்னை பெருநகர வண்ணாரப்பேட்டை துணை கமிஷனராக இருந்த சக்திவேல் சென்னை பெருநகர நுண்ணறிவுப்பிரிவு1 துணை கமிஷனராகவும், சென்னை கிழக்கு போக்குவரத்து துணை கமிஷனராக இருந்த பாஸ்கரன் சென்னை வண்ணாரப்பேட்டை துணை கமிஷனராகவும், சென்னை பெருநகர காவல் நலன் மற்றும் எஸ்டேட் துணை கமிஷனராக இருந்த மெகலினா ஐடன் சென்னை கிழக்கு போக்குவரத்துதுணைகமிஷனராகவும்,

சென்னை மயிலாப்பூர் துணை கமிஷனராக இருந்த ஹரி கிரண் பிரசாத் சென்னை பெருநகர காவலர் நலன் மற்றும் எஸ்டேட் துணை கமிஷனராகவும், தமிழ்நாடு சிறப்பு காவல் 14 கமாண்டன்டாக இருந்தகார்த்திக் சென்னை பெருநகர மயிலாப்பூர் துணை கமிஷனராகவும், ஈரோடு மாவட்ட எஸ்பியாக இருந்த ஜவஹர் வடக்குமண்டலசிபிசிஐடி எஸ்பியாகவும், திருப்பூர் நகர வடக்கு சட்டம் ஒழுங்கு துணை கமிஷனராக இருந்தசுஜாதாஈரோடு மாவட்ட எஸ்பியாகவும் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அமுதம் நியாயவிலை அங்காடியில் அமைச்சர் திடீர் ஆய்வு



சென்னை, மார்ச்.27

உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர்அர.சக்கரபாணி அமுதம் நியாயவிலை அங்காடியில் திடீர் ஆய்வு செய்தார். உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி சென்னை மண்டலத்தில் கீழ்ப்பாக்கம், பிளவர்ஸ் சாலை, அமுதம் நியாயவிலை அங்காடியில் நேற்று முன்தினம் மாலையில் விற்பனை முனைய இயந்திரத்துடன் எடைத்த ராசைஇணைத்தல்தொடர்பான ஆய்வினை மேற்கொண்டார். விற்பனை முனைய இயந்திரத்தில் கைரேகை பதிவு, எடைத்தராசில் பொருளை எடைபோட்டு விற்பனை முனைய இயத்திரத்துடன் இணைத்து ரசீது போடுதல், போன்றவற்றை பற்றிக கடை விற்பனையாளரிடமும் பொதுமக்களிடமும் கருத்துகளை கேட்டறிந்தார். ஆய்வின்போது உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை இயக்குநர் மோகன், இணை ஆணையாளர், துணை ஆணையாளர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் (வடக்கு), இணைப்பதிவாளர் (பொது விநியோக திட்டம் 1) மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# டாஸ்மாக் நிறுவனத்தில் அமலாக்கத்துறை சோதனையை எதிர்த்து தமிழக அரசு தொடர்ந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் விசாரணையிலிருந்து விலகல்: வேறு அமர்வுக்கு மாற்ற தலைமை நீதிபதிக்கு பரிந்துரை

சென்னை, மார்ச்.27

டாஸ்மாக்நிறுவனத்தில் அமலாக்கத் துறை சோதனை நடத்தியதற்கு எதிராக தமிழக அரசு மற்றும் டாஸ்மாக் நிறுவனம் தாக்கல் செய்த வழக்குகளின் விசாரணையில் இருந்து நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ் மற்றும் என்.செந்தில் குமார் அமர்வு விலகுவதாக அறிவித்துள்ளது. டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் கடந்த 6ம் தேதி முதல் 8ம் தேதி வரை சோதனை நடத்திய அமலாக்கத் துறை, டாஸ்மாக் நிறுவனத்துக்கு மதுபானங்கள் கொள்முதல் செய்தது, பார் உரிமம் வழங்கியது, மதுபானங்களை மதுபான கடைகளுக்கு கொண்டு செல்வதற்கான போக்குவரத்துக்கு டெண்டர் வழங்கியது உள்ளிட்டவற்றில் 1000 கோடி ரூபாய் முறைகேடு நடந்துள்ளதாக அறிக்கை வெளியிட்டது.

அமலாக்கத் துறையின் இந்த சோதனையை அரசியலமைப்பு சட்டத்தின் கூட்டாட்சி கட்டமைப்புக்கு விரோதமானது என்று அறிவிக்கக் கோரியும், அரசு அனுமதியின்றி நடத்தப்பட்ட சோதனையை சட்டவிரோதனானது என்று அறிவிக்க கோரியும், விசாரணை என்ற பெயரில் டாஸ்மாக் அதிகாரிகளை துன்புறுத்த கூடாது என்று அமலாக்கத் துறைக்கு உத்தரவிடக் கோரியும் தமிழக உள்துறை செயலாளரும், டாஸ்மாக்நிர்வாக இயக்குனரும் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தனர்.

இந்த வழக்கை விசாரித்த, நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ் மற்றும் என்.செந்தில் குமார் அமர்வு, அமலாக்க துறை பதிலளிக்க உத்தரவிட்டு, விசாரணையை தள்ளிவைத்திருந்தனர். அதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்க கூடாது என்றுஉத்தரவிட்ட நீதிபதிகள், எந்த வழக்குகளின் அடிப்படையில் அமலாக்க துறை சோதனை நடத்தியது என்பது குறித்த விவரங்களையும் பதில்மனுவில் தெரிவிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டிருந்தனர்.

இந்நிலையில் இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்த போது, இந்த வழக்கின் விசாரணையில் இருந்து விலகுவதாக இரு நீதிபதிகளும் அறிவித்தனர்.

மேலும், இந்த வழக்கை வேறு அமர்வுக்கு மாற்றுமாறு தலைமை நீதிபதிக்கு பரிந்துரை செய்தனர்.

# மயிலாப்பூர் பண்ட் நிதி மோசடியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு சொத்துக்களை ஏலம் விட்டு பணத்தை வழங்கலாமா? தேவநாதன் யாதவ் பதில் அளிக்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, மார்ச்.27

நிதி நிறுவன மோசடி வழக்கில் கைது செய்யப்பட்ட தேவநாதன் யாதவின் சொத்துக்களை ஏலம் விட்டு, அந்த பணத்தை பாதிக்கபட்டவர்களுக்கு வழங்கலாமா? என்பது குறித்து தேவநாதன்யாதவ் பதிலளிக்குமாறு சென்னைஉயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சென்னை மயிலாப்பூரில் செயல்பட்டு வந்த தி மயிலாப்பூர் இந்து பெர்மனெட் பண்ட் நிதி நிறுவனத்தில் முதலீடு செய்த 144 முதலீட்டாளர்களிடம் 24 கோடியே 50 லட்சம் ரூபாய் மோசடி செய்ததாக அந்நிதி நிறுவனத்தின் இயக்குனர் தேவநாதன் யாதவ் உள்பட 6 பேரை பொருளாதாரகுற்றப்பிரிவு காவல் துறையினர் கைது செய்தனர்.

இந்த வழக்கில் ஜாமீன் கோரி தேவநாதன் உள்பட 3 பேர் தாக்கல் செய்த மனுக்களை ஏற்கனவே சென்னைஉயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்த நிலையில், தேவநாதன் யாதவ் மற்றும்

குணசீலன் ஆகியோர் ஜாமீன் கோரி 2வது முறையாக மனு தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்கு நீதிபதி சுந்தர் மோகன் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, பாதிக்கபட்டவர்கள் தரப்பில் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் புகார் அளித்துள்ளனர். பாதிக்கபட்ட அனைவரும் நடுத்தரவர்க்கத்தை சேர்ந்தவர்கள்.

தேவநாதன் யாதவ் அரசியல் பின்புலம் மற்றும் பண பலம் கொண்டவர் என்பதால் அவருக்கு ஜாமீன் வழங்க கூடாது என்று பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில் வாதிடப்பட்டது. காவல்துறை தரப்பில் கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் இ.ராஜ்திலக் ஆஜராகி, விசாரணைக்கு மனுதாரர்கள்ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்று தெரிவித்தார். வழக்கை விசாரித்த நீதிபதி, தேவநாத யாதவின் சொத்துக்களை ஏலம் விட்டு, அதன் மூலம் வரும் பணத்தை பாதிக்கபட்டவர்களுக்கு வழங்கலாமா? என்பது குறித்து தேவநாதன் பதிலளிக்குமாறு உத்தரவிட்டு விசாரணையை ஏப்ரல் 3ம் தேதிக்கு தள்ளிவைத்தார்.

# அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் சிறப்பு ஆசிரியர்களை நிரந்தரமாக உருவாக்க கோரி 723 பேர் வழக்கு: ஒன்றிய, தமிழக அரசுகள் பதில் தர உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, மார்ச்.27

தமிழகம் முழுவதும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் சிறப்பு குழந்தைகளுக்கான, ஆசிரியர்கள் நிரந்தர பணியிடங்களாக உருவாக்க கோரி 723 சிறப்பு ஆசிரியர்கள் தாக்கல் செய்த மனுவுக்கு ஒன்றிய, மாநில அரசுகள் பதிலளிக்குமாறு சென்னைஉயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கல்வி உரிமை சட்டத்தின் கீழ், சிறப்பு குழந்தைகளுக்கான ஆசிரியர்களாக 2002ம் ஆண்டு தொகுப்பூதியம் அடிப்படையில் 1800 சிறப்பு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். 4,500 ரூபாய் தொகுப்பூதியத்தில் நியமிக்கப்பட்ட இவர்கள், தற்போது 20 ஆயிரம் ரூபாய் தொகுப்பூதியமும், 5 ஆயிரம் ரூபாய் போக்குவரத்து செலவுக்காகவும் அரசிடம் இருந்து பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில், சிறப்பு குழந்தைகளுக்கான ஆசிரியர் பணியிடங்களை நிரந்தரமாக உருவாக்க கோரி 723 சிறப்பு ஆசிரியர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கு நீதிபதி, சி.வி கார்த்திகேயன் முன்பு விசாரணைக்கு வந்தது அப்போது, மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் கவிதா ராமேஷ்வர், தமிழக முழுவதும் ஒரு லட்சத்து 30 ஆயிரம் சிறப்பு குழந்தைகள் உள்ளனர்.

10 குழந்தைகளுக்கு 1 ஆசிரியர்கள் என்ற விகிதத்தின் அடிப்படையில் தமிழகத்தில் 13 ஆயிரம் சிறப்பு ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

ஆனால் ஒரு பணியிடத்தை கூட உருவாக்காத மாநில அரசு 1800 பேரை சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் தொகுப்பூதிய அடிப்படையில் நியமித்துள்ளது. தொகுப்பூதியத்தின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட சிறப்பு ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு, மருத்து விடுப்பு உள்ளிட்ட எந்த சலுகைகளும் வழங்கப்படுவதில்லை. எனவே, தொகுப்பூதிய அடிப்படையில் பணியாற்றும் ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று வாதிட்டார். இந்த வாதத்தை கேட்ட நீதிபதி, இந்த மனுவுக்கு ஏப்ரல் 21ம் தேதி பதிலளிக்குமாறு ஒன்றிய, மாநில அரசுக்கு உத்தரவிட்டு வழக்கின் விசாரணையை தள்ளிவைத்தார்.

# குன்னூர் அருகே ஆரம்ப சுகாதார மையம் பகுதியில் யானைகள் முகாம்



குன்னூர், மார்ச்.27

குன்னூர் ஆரம்ப சுகாதார மையம் பகுதியில் யானைகள் முகாமிட்டுள்ளதால் வாகன ஓட்டிகள் யானைகளை தொந்தரவு செய்யக் கூடாது என வனத்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். நீலகிரி மாவட்டம் குன்னூர் மேட்டுப்பாளையம் மலைப்பாதையில் கடந்த சில நாட்களாக காட்டு யானைகள் முகாமிட்டுள்ளன. அவ்வப்போது உணவு மற்றும் தண்ணீருக்காக மலைப்பாதையின் சாலையோரத்திலும், மலை ரயில் பாதையிலும் யானைகள் முகாமிட்டுள்ளன. இந்த நிலையில், இன்று காலை கே.என்.ஆர் பகுதி ஆரம்ப சுகாதார நிலையம் அருகே சாலையோரத்தில் குட்டியுடன் காட்டு யானைகள் முகாமிட்டுள்ளது.

இதனை கண்ட வாகன ஓட்டிகள் காட்டு யானைகளை வீடியோ எடுத்துள்ளனர். காட்டு யானைகள் குட்டியுடன் சாலையில் உலா வருவதால், வாகன ஓட்டிகள் புகைப்படம் எடுத்து தொந்தரவு செய்ய வேண்டாம் எனவும், எச்சரிக்கையாக பயணம் மேற்கொள்ள வேண்டும் எனவும் வனத்துறையினர் அறிவுறுத்தி உள்ளனர்.

# கூடுதல் எஸ்பி பதவி உயர்வு வழங்க ஐகோர்ட் இடைக்கால தடை



சென்னை, மார்ச்.27

பதவி உயர்வு மூலம் துணை காவல் கண்காணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களாக பதவி உயர்வு வழங்க ஐகோர்ட் இடைக்காலத் தடை விதித்துள்ளது. நேரடி துணை காவல் கண்காணிப்பாளர்களை, கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களாக நியமிக்க கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கு நீதிபதி சி.வி.கார்த்திகேயன் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, தகுதி அடிப்படையில் பணி மூப்பு பட்டியலை தயாரித்து, கூடுதல் எஸ்.பி கள் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும்.

ஆனால் பணி மூப்பு பட்டியல் தயாரிக்காமல் தற்காலிக அடிப்படையில் இந்த பணி நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, மனுதாரர்கள் தரப்பில் மூத்த வழக்கறிஞர்கள் ஜி.சங்கரன், ஏ.ஆர்.எல். சுந்தரேசன், மற்றும் வழக்கறிஞர் முகமது முசாமில் ஆகியோர் வாதிட்டனர். மேலும், அனுமதிக்கப்பட்ட 197 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் பணியிடங்களில், தற்காலிக பதவி உயர்வு மூலம் துணை காவல் கண்காணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டவர்களே அதிகளவில் உள்ளதாக வாதிட்டனர். இதை ஏற்றுகொண்ட நீதிபதி, பதவி உயர்வு மூலம் துணை காவல் கண்காணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு, கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களாக பதவி உயர்வு வழங்க இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டார்.

# கே.வி.குப்பம் அருகே யானைகள் தொடர் அட்டகாசம்; தென்னை, நெற்பயிர்கள் சேதம்: விரட்டும் பணியில் வனத்துறை தீவிரம்



கே.வி.குப்பம், மார்ச்.27

கே.வி.குப்பம் அருகே விவசாய நிலத்தில் உள்ள தென்னை மரங்கள், நெற்பயிர்களை சேதப்படுத்திய யானைகளை விரட்டும் பணியில் வனத்துறையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் அடுத்த தொண்டான்துளசி, மாளியாபட்டு, பனமடங்கி, பள்ளத்தூர், காளாம்பட்டு மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் மலையையொட்டி உள்ள விளைநிலங்களில் கடந்த சில நாட்களாக யானைகள் புகுந்து அட்டகாசம் செய்து வருகிறது. இதேபோல் நேற்றிரவு பனமடங்கி, பள்ளத்தூர், ராமாபுரம் ஆகிய கிராமங்களில் உள்ள விவசாய நிலங்களில் யானைகள் புகுந்து, தென்னை மரங்கள், நெற்பயிர்களை சேதப்படுத்தியது.

இதுகுறித்து தகவல் அறிந்த வனத்துறையினர் விரைந்து சென்று யானைகள் நடமாட்டம் குறித்து கண்காணித்து அதனை விரட்டியடிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். தொடர்ந்து சுழற்சி முறையில் ரோந்து பணியில் ஈடுபட்டுள்ளனர். யானைகளால் சேதமான பயிர்களை வருவாய்துறையினர் கணக்கெடுத்து வருகின்றனர். தொடர்ந்து யானைகள் விவசாய நிலங்களில் புகுந்து அட்டகாசம் செய்து பயிர்களை சேதப்படுத்தி வருவது அப்பகுதி விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. யானைகளால்சேதமானபயிர்களுக்கு இழப்பீடு வழங்கவேண்டும் எனவும், யானைகள் அட்டகாசத்தை தடுக்க நிரந்தர தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் எனவிவசாயிகள்கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து வனத்துறையினர் கூறுகையில், யானைகளால் சேதமான பயிர்கள் குறித்து கணக்கெடுப்பு நடந்து வருகிறது. அதன் அறிக்கையை பெற்றவுடன் விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும் என்றனர்.

வேலூர்மாவட்ட வனத்துறையில் வேலூர், குடியாத்தம், ஒடுகத்தூர், பேரணாம்பட்டு ஆகிய வனச்சரக அலுவலகங்கள் உள்ளன. இவற்றில் கே.வி. குப்பம் தாலுகாவுக்கு உட்பட்ட வனப்பகுதியின் ஒரு பாதி குடியாத்தம் வனச்சரக அதிகாரிகள் கண்காணிப்பிலும், மற்றொரு பாதி வேலூர் வனச்சரக அதிகாரிகள் கண்காணிப்பிலும் உள்ளது. இந்நிலையில் காட்பாடி, கே.வி.குப்பம் பகுதிகளை ஒன்றிணைத்து காட்பாடிக்கு என புதிய வனச்சரகம் தொடங்கப்பட உள்ளது. இதற்கான பணிகள் ஏப்ரல் 1ம்தேதிக்கு பிறகு தொடங்கப்படும். மேலும் வேலூர் வனச்சரகத்தில் ஆட்கள் பற்றாக்குறை உள்ள நிலையில் புதிய வனச்சரகம் உருவாக்கப்பட உள்ளதால் கூடுதல் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு உரிய பணிகளும் துரிதமாக நடைபெறும் என வேலூர் மாவட்ட வனத்துறை அதிகாரி தரணி தெரிவித்தார்.

# ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு சொந்த ஊருக்கு செல்ல கூடுதல் பேருந்துகள் இயக்கம்: அரசு போக்குவரத்துக் கழகம் தகவல்

சென்னை, மார்ச்.27

வார இறுதி நாட்கள் மற்றும் ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க உள்ளது. 28 (வெள்ளி), 29 (சனி), 30 (ஞாயிறு) மற்றும் 31ம் தேதி ரம்ஜான் பண்டிகை என தொடர்விடு முறையை முன்னிட்டு சென்னையிலிருந்தும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க போக்குவரத்துக் கழகம் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி, சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி. தூத்துக்குடி. கோயம்புத்தூர். சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 28ம் தேதி 460 பேருந்துகளும், 29ம் தேதி 530 பேருந்துகளும் ஆக மொத்தம் 990 பேருந்துகளும், மற்றும் 31ம் தேதி ரம்ஜான் பண்டிகை அன்று பல்வேறு இடங்களிலிருந்து சென்னைக்கும் மற்றும் இதர ஊர்களுக்கு 890 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னைகோயம்பேட்டிலிருந்துதிருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 28ம் தேதி அன்று 100 பேருந்துகளும் மற்றும் 29ம் தேதி அன்று 95 பேருந்துகளும் மாதவரத்திலிருந்து 28 மற்றும் 29ம் தேதி அன்று தலா 20 பேருந்துகளும் மேற்கூறிய இடங்களிலிருந்தும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், பெங்களூர், திருப்பூர். ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலிருந்தும் பல்வேறு இடங்களுக்கும் 300 சிறப்பு பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. திங்கள் அன்று சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூர் திரும்ப வசதியாக பயணிகளின் தேவைக்கேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் சிறப்பு பேருந்துகள் இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

# ஜல்லிக்கட்டில் பரிசுகளை அள்ளிக்குவித்த பெரியகருப்பன் காளை உயிரிழப்பு: ஈச்சம்பட்டி கிராம மக்கள் கண்ணீர் அஞ்சலி

சமயபுரம், மார்ச்.27

திருச்சி மாவட்டம் சமயபுரம் அடுத்த ஈச்சம்பட்டியை சேர்ந்த ஆட்டோ டிரைவர் ஆல்பர்ட்(34). இவர் 10க்கும் மேற்பட்ட நாட்டுவகை மாடுகளை வளர்த்து வருகிறார். இதில் 4 ஜல்லிக்கட்டு காளைகளும் அடங்கும். 8 ஆண்டுகளாக வளர்த்து வந்த பெரிய கருப்பன் என்ற ஜல்லிக்கட்டு காளைக்கென தனி ரசிகர் பட்டாளமே உள்ளது. தமிழகத்தில் திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை, பெரம்பலூர், அரியலூர், திண்டுக்கல், மதுரை, தேனி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் நடைபெறும் ஜல்லிக்கட்டு போட்டிகளில் பங்கேற்று வீரர்களை துவம்சம் செய்ததுடன் பரிசுகளை பெரியகருப்பன் குவித்து வந்தது. ஜல்லிக்கட்டில் பெருய கருப்பன் காளை களமிறங்குவதை பார்ப்பதற்காகவே தனிக்கூட்டம் உள்ளது. இந்நிலையில் பெரிய கருப்பன் காளைக்கு திடீரென உடல்நல குறைவு ஏற்பட்டது. இதற்காக சிகிச்சையும் அளிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் நேற்று காளை இறந்தது. இதையடுத்து காளையின் உடல் இறுதிச்சடங்கு செய்து இன்று அடக்கம் செய்யப்பட்டது.

இறுதி சடங்கில் அப்பகுதி மக்கள், மாடு பிடி வீரர்கள், ஜல்லிக்கட்டு ஆர்வலர்கள் திரளாக கலந்து கொண்டு கண்ணீருடன் அஞ்சலி செலுத்தினர்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

27.3.2025

# 'ஒன்றிணைவோம் சமத்துவம் காண்போம்' என்ற தலைப்பில் கல்லூரி மாணவ மாணவிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது

தூத்துக்குடி, மார்ச்.27

தூத்துக்குடி மாவட்ட காவல்துறை சமூகநீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு சார்பாக 'ஒன்றிணைவோம் சமத்துவம் காண்போம்' என்ற தலைப்பில் கல்லூரி மாணவ மாணவிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.



தூத்துக்குடி மாவட்ட காவல்துறை, சமூகநீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு சார்பாக 'ஒன்றிணைவோம் சமத்துவம் காண்போம்' என்ற தலைப்பில் கல்லூரி மாணவ மாணவிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று (25.03.2025) ஸ்ரீவைகுண்டம், பத்மநாபமங்கலம் பகுதியில் உள்ள ஸ்ரீ குமரகுருபரர் சுவாமி கலை கல்லூரியில் வைத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. ஆல்பர்ட் ஜான் இ.கா.ப அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து சமூக ஒற்றுமை, பெண்கள் பாதுகாப்பு, போதைப்பொருள் தடுப்பு உள்ளிட்டவை குறித்து கல்லூரி மாணவ மாணவிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர்கள் திரு. ஆறுமுகம், திரு. தீபு, தூத்துக்குடி மாவட்ட கூடுதல் ஆட்சியர் திரு. பென்னடிக் ஆசீர், வருவாய் கோட்ட அலுவலர் திரு. பிரபு, சமூகநீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.ஜமால், ஸ்ரீவைகுண்டம் காவல் துணை கண்காணிப்பாளர் திரு. ராமகிருஷ்ணன் மற்றும் காவல் ஆய்வாளர் உட்பட காவல்துறையினர் மற்றும் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலை கல்லூரி முதல்வர் திரு.விஜயகுமார் உட்பட கல்லூரி மாணவ மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

# சிவகங்கை ஜூஸ் கடைகளில் சோதனை; 200 கிலோ அழுகிய பழங்கள் பறிமுதல்: உணவு பாதுகாப்பு துறை அதிரடி

சிவகங்கை, மார்ச்.27

சிவகங்கை நகரில் உணவு பாதுகாப்பு துறை அலுவலர்கள் மேற்கொண்ட சோதனையில் 200 கிலோ கெட்டுப்போன பழங்கள் பறிமுதல் செய்யப்பட்டது. கோடைகாலம் தொடங்கியுள்ள நிலையில் பழ ஜூஸ், தர்பூசணி, வெள்ளரி உள்ளிட்டவைகளின் விற்பனை சூடு பிடிக்க தொடங்கியுள்ளது. இந்நிலையில், சிவகங்கை உணவு பாதுகாப்பு அலுவலர் சரவணன் தலைமையிலான குழுவினர் சிவகங்கை நகர் முழுவதும் உள்ள பழ விற்பனைக் கடை மற்றும் பழச்சாறு கடைகளில் நேற்று மாலை திடீர் சோதனை மேற்கொண்டனர்.



இதில், பழச்சாறு கடைகளில் ஆய்வு மேற்கொண்டபோது சுமார் 200 கிலோ அழுகிய ஆரஞ்சு, வாழை, ஆப்பிள், கொய்யா உள்ளிட்ட பழங்கள் ஜூஸ் தயாரிக்க வைக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. இதையடுத்து அந்தப் பழங்களை அலுவலர்கள் பறிமுதல் செய்தனர். அழுகிய பழங்களை பழச்சாறு தயாரிப்புக்காக வைத்திருந்த கடைகளுக்கு ரூ.3 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது. மேலும் கடை உரிமையாளர்களிடம் அழுகிய பழங்களில் ஜூஸ் தயாரிப்பதால் பொதுமக்களுக்கு ஏற்படும் உடல் உபாதைகள் குறித்து எடுத்துரைத்த அலுவலர்கள் அழுகிய பழங்களை பயன்படுத்தக்கூடாது என எச்சரிக்கை விடுத்தனர்.

# பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம்: மேயர் இந்திராணி பொன்வசந்த் தலைமையில் நடைபெற்றது

மதுரை மாநகராட்சி மண்டலம் 1 (கிழக்கு) அலுவலகத்தில் பொது மக்கள் குறைதீர்க்கும் முகாம் மேயர் இந்திராணி பொன்வசந்த் ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன், இ.ஆப., அவர்கள் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.



மதுரை மாநகராட்சி மண்டலம் 1 (கிழக்கு) அலுவலகத்தில் நடைபெற்ற பொது மக்கள் குறைதீர்க்கும் முகாமில் வரி திருத்தம் வேண்டி 13 மனுக்களும், பாதாளச் சாக்கடை மற்றும் குடிநீர் இணைப்பு, சாலை வசதி, தெருவிளக்கு மற்றும் அடிப்படை வசதி வேண்டி 14 மனுக்களும், சுகாதாரம் தொடர்பாக 2 மனுக்களும், ஆக்கிரமிப்பு தொடர்பாக 6 மனுக்களும், இதர கோரிக்கைகள் தொடர்பாக 2 மனுக்களும் என மொத்தம் 37 மனுக்கள் பொது மக்களிடம் இருந்து மாண்புமிகு மேயர் அவர்களால் நேரடியாக பெறப்பட்டது.

தொடர்ந்து மண்டலம் 1 வார்டு எண்.14 புதூர் மண்மலை மேடு கல்குளம் மற்றும் தண்டலை வாய்க்கால் பகுதிகளில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்வது குறித்து மாண்புமிகு மேயர், ஆணையாளர் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

முன்னதாக மண்டலம் 3 வார்டு எண்.50 வைகை தென்கரை அனுமார் கோவில் படித்துறை பகுதியில் உள்ள அனுப்பானடி வாய்க்கால் தூர்வாரும் பணியினை மாண்புமிகு மேயர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தேவையற்ற குப்பைகளை உடனுக்குடன் அகற்றி மழைநீர் சீராக செல்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் கூறினார்.

இம்முகாமில் துணை மேயர் திரு.தி.நாகராஜன், மண்டலத் தலைவர்கள் திருமதி.வாசுகி, திருமதி.பாண்டிச்செல்வி, உதவி ஆணையாளர் திரு. மணியன், செயற்பொறியாளர் (திட்டம்) திருமதி. மாலதி, மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மகேஸ்வரன், உதவி நகர்நல அலுவலர் மரு.அபிஷேக், செயற்பொறியாளர் திரு. சேகர், உதவி வருவாய் அலுவலர் திரு,லோகநாதன், உதவிப் பொறியாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அருண்ராஜுக்கு எதிராக பிறப்பித்த வாரண்ட்டை ரத்து செய்தது ஐகோர்ட்

சென்னை, மார்ச்.27

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அருண்ராஜுக்கு எதிராக பிறப்பித்த வாரண்ட்டை ஐகோர்ட் ரத்து செய்தது. மதுராந்தகம் தாலுகா ஆனைகுன்றத்தில், கிராம உதவியாளராக இருந்த முனுசாமி கடந்த 2001ம் ஆண்டு மரணமடைந்தார். முனுசாமியின் மகன் ராஜகிரி, கருணை அடிப்படையில் வேலை வழங்கக் கோரி உயர்நீதி மன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். மனுவை விசாரித்த ஐகோர்ட், 3 மாதங்களில் ராஜகிரிக்கு கருணை அடிப்படையில் பணி வழங்க 2023ல் உத்தரவிட்டிருந்தது.

உத்தரவை அமல்படுத்தவில்லை எனக் கூறி ராஜகிரி, 2024ம் ஆண்டு நீதிமன்ற அவமதிப்பு வழக்கை தாக்கல் செய்தார். செங்கல்பட்டு ஆட்சியர் நேரில் ஆஜராக உத்தரவிட்டு, நீதிபதி எம்.எஸ். ரமேஷ் சட்டப்பூர்வ நோட்டீஸ் பிறப்பித்தார். வழக்கு மீண்டும் கடந்த 22ம் தேதி விசாரணைக்கு வந்தபோது, ஆட்சியர் ஆஜராகாததால், ஜாமீனில் வெளிவரக்கூடிய வாரண்ட் பிறப்பிப்பிக்கப்பட்டது. இந்நிலையில் இந்த வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ச. அருண்ராஜ் நேரில் ஆஜராகி மனு தாக்கல் செய்தார்.



அதில் உயர்நீதிமன்ற உத்தரவு தனது கவனத்திற்கு கொண்டுவரவில்லை என்றும் நிபந்தனையற்ற மன்னிப்பு கோருவதாகவும் சில நிர்வாகக் காரணத்தால் மனுதாரருக்குப் பணி வழங்குவது தாமதம் ஏற்பட்டதாகத் தெரிவித்தார்.

மேலும், தற்போது திருப்போரூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் பணி வழங்கி நேற்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என மனுவில் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எதிரான நீதிமன்ற வாரண்ட் உத்தரவைத் திருப்பப் பெற்ற நீதிபதி, நீதிமன்ற அவமதிப்பு வழக்கை ஏப்ரல் 4ம் தேதிக்குத் தள்ளிவைத்தார். மேலும் அடுத்த விசாரணையில் இருந்து நேரில் ஆஜராவதில் இருந்து விலக்கு அளித்து நீதிபதி உத்தரவிட்டார்.

# "ஏஸ்" படத்தின் 'உருகுது உருகுது' பாடலின் மேக்கிங் வீடியோ வெளியீடு




கடந்த 2018ம் ஆண்டு விஜய் சேதுபதி நடிப்பில் வெளியான திரைப்படம் ஒரு நல்ல நாள் பார்த்து சொல்றேன். இப்படத்தை ஆறுமுக குமார் இயக்கியிருந்தார். இத்திரைப்படம் பெரிய அளவில் வரவேற்பு பெறாத நிலையில், 5 ஆண்டுகள் கழித்து இந்த கூட்டணி மீண்டும் இணைந்துள்ளது. இப்படத்தின் கதைக்களம் மலேசியா என்பதால், கடந்த ஆண்டு இப்படத்தின் படப்பிடிப்பு மலேசியாவில் தொடங்கியது. மொத்த படப்பிடிப்பும் மலேசியாவில் விறுவிறுப்பாக நடைபெற்று முடிந்தது.

விஜய்சேதுபதிநடித்துமுடித்தஅவரது51வதுபடமான'ஏஸ்'இறுதிக்கட்டத்தில் உள்ளது.இத்திரைப்படத்தில்விஜய்சேதுபதிபலவித்தியாசமானகெட்டப்புகளில் நடித்துள்ளார். விஜய் சேதுபதியுடன் அனைத்து காட்சிகளிலும் பயணிக்கும் கதாபாத்திரத்தில் யோகி பாபு நடித்துள்ளார். ருக்மிணி, விஜய் சேதுபதிக்கு ஜோடியாக நடித்திருக்கிறார். மேலும் ஜஸ்டின் பிரபாகரன் படத்திற்கு இசை அமைத்திருக்கிறார்.

சமீபத்தில் 'ஏஸ்' படத்தின் 'உருகுது உருகுது' எனத்தொடங்கும் முதல் பாடல் வெளியானது. ஜஸ்டின் பிராபகரன் இசையமைப்பில் கவிஞர் தாமரை எழுதிய இப்பாடலை கபில் கபிலன், ஷ்ரேயா கோஷல் இணைந்து பாடியுள்ளனர்.

இந்நிலையில் 'உருகுது உருகுது' பாடலின் மேக்கிங் வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது.

# பிரேம்ஜி நடிக்கும் "வல்லமை" ரிலீஸ் தேதி அறிவிப்பு




தமிழ் சினிமாவில் நகைச்சுவை மற்றும் குணச்சித்திர கதாப்பாத்திரங்களில் நடிப்பவர் நடிகர்பிரேம்ஜி. இவர்விஜய்நடிப்பில்வெளியானதிகோட்திரைப்படத்தில்நடித்திருந்தார். அடுத்ததாக பிரேம்ஜி கதாநாயகனாக வல்லமை என்ற திரைப்படத்தில் நடித்துள்ளார். இப்படத்தை பேட்லர்ஸ் சினிமா நிறுவனம் தயாரித்துள்ளது. இப்படத்தை கருப்பையா முருகன்எழுதி இயக்கிதயாரித்தும்உள்ளார். ஜிகேவி இப்படத்திற்குஇசையமைத்துள்ளார். கணேஷ் குமார் படதொகுப்பை செய்துள்ளார்.

"வல்லமை" படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் சமீபத்தில் வெளியாகி வைரலானது. இந்தப் படத்தில் திவ்ய தர்ஷினி, தீபா சங்கர் ஆகியோர் நடித்துள்ளனர். இந்தப் படத்தின் பாடல்களை இயக்குநர் கருப்பையா முருகனே எழுதியுள்ளார்.

பிரேம்ஜி நடிக்கும் "வல்லமை" படத்தின் டீசர் வெளியாகி வைரலானது. இப்படத்திற்கு தணிக்கை வாரியம் 'யு/ஏ' சான்றிதழ் கொடுத்துள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

இந்நிலையில் 'வல்லமை' திரைப்படம் ஏப்ரல் 25ம் தேதி வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

# சல்மான் கானின் "சிக்கந்தர்" புரோமோஷன் வீடியோ வெளியீடு




தமிழ் சினிமாவில் முன்னணி இயக்குனர்களில் ஒருவரான ஏ.ஆர். முருகதாஸ் தீனா, ரமணா, ரஜினி, கத்தி, துப்பாக்கி என பல வெற்றி படங்களை இயக்கி ரசிகர்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தவர். இவர் தற்போது பாலிவுட்டில் சல்மான்கானை வைத்து 'சிக்கந்தர்' படத்தை இயக்கியுள்ளார். இப்படத்தை பிரபல தயாரிப்பாளர் சஜித் நதியத்வாலா தயாரிக்கிறார்.

ராஷ்மிகாமந்தனாகதாநாயகியாகநடித்திருக்கும் இப்படத்தில் காஜல் அகர்வால், சுனில் ஷெட்டி மற்றும் சத்யராஜ் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். சந்தோஷ் நாராயணன் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார். நடிகர் சத்யராஜ் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார்.

இப்படம் வருகிற 30ந் தேதி ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு உலக அளவில் 'சிக்கந்தர்' படம் வெளியாக உள்ளது. படத்தின் டிரெய்லர் காட்சிகள் சமீபத்தில் வெளியாகி இணையத்தில் வைரலாகி வருகிறது.

படத்தின் புரோமோஷன் பணிகள் தீவிரமாக நடைப்பெற்று வருகிறது. இந்நிலையில் சல்மான் கான், அமீர் கான் மற்றும் ஏ. ஆர் முருகதாஸ் இணைந்து கலந்துரையாடல் செய்து வீடியோ உருவாக்கியுள்ளனர். புரோமோவை படக்குழு வெளியிட்டுள்ளது. அதில் அமீர் கான் ஏ.ஆர் முருகதாஸை பார்த்து எங்கள் இருவரின் யார் உண்மையான சிக்கந்தர் என கேள்வி கேட்கிறார் அதற்கு பதி சொல்ல முடியாமல் ஏ.ஆர் முருகதாஸ் முழிக்கிறார். இதன் வீடியோ விரைவில் வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது. அமீர் கான் நடிப்பில் இந்தியில் கஜினி திரைப்படத்தை ஏ.ஆர் முருகதாஸ் இயக்கியது குறிப்பிடத்தக்கது.

# வங்காளதேச கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளர் பதவி காலம் நீட்டிப்பு




அண்மையில் முடிவடைந்த ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபி தொடரில் வங்காளதேச அணி ஒரு வெற்றி கூட பெறாமல் படுதோல்வியை சந்தித்தது. இதன் எதிரொலியாக வங்காளதேச அணியில் பல அதிரடி மாற்றங்கள் நிகழும் என்று எதிர்பார்க்கப்பட்டது. பயிற்சியாளர்கள், தேர்வுக்குழு மற்றும் வீரர்கள் என அனைத்திலும் பல மாற்றங்கள் இருக்கும் என்று கூறப்பட்டது.

இருப்பினும் வங்காளதேச அணியின் தலைமை பயிற்சியாளராக உள்ள பில் சிம்மன்சின் பதவிக்காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது. 2027 ஒருநாள் உலகக்கோப்பை வரை அவர் பதவியில் தொடருவார் என்று வங்காளதேச கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது.

வெஸ்ட் இண்டீஸ் முன்னாள் வீரரான பில் சிம்மன்ஸ் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் வங்காளதேச அணியின் தலைமை பயிற்சியாளர் பதவியை ஏற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கே.எல்.ராகுல் அதியா தம்பதிக்கு பெண் குழந்தை.. வித்தியாசமான முறையில் வாழ்த்து தெரிவித்த டெல்லி வீரர்கள்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வீரரான கே.எல். ராகுல் தனது நீண்ட நாள் காதலியான இந்தி நடிகர் சுனில் ஷெட்டியின் மகளும் நடிகையுமான அதியா ஷெட்டியை கடந்த 2023ம் ஆண்டு திருமணம் செய்தார்.

இந்த நிலையில் கே.எல்.ராகுல் அதியா ஷெட்டி தம்பதியினருக்கு நேற்று முன்தினம் பெண் குழந்தை பிறந்தது. இதனை தங்களது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அறிவித்துள்ளனர். இருவருக்கும் பல தரப்பினரும் தங்களது வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.

அந்த வகையில் நடப்பு ஐ.பி.எல். தொடரில் கே.எல்.ராகுல் இடம்பெற்றுள்ள டெல்லி கேப்பிடல்ஸ் அணியினர் வித்தியாசமான முறையில் அவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

கையில் குழந்தையை தாலாட்டுவது போல் சைகை காட்டி வீடியோ வெளியிட்டுள்ளனர். அந்த வீடியோ சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது.

முன்னதாக குழந்தை பிறப்பை முன்னிட்டு டெல்லி அணியின் தொடக்க ஆட்டத்தில் கே.எல்.ராகுல் விளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆசிய கோப்பை கால்பந்து தகுதி சுற்று: இந்தியா வங்காளதேசம் ஆட்டம் டிரா



19வது ஆசிய கோப்பை கால்பந்து போட்டி 2027ம் ஆண்டு நடைபெற உள்ளது. இதற்கான தகுதி சுற்று ஆட்டங்கள் தற்போது பல்வேறு நாடுகளில் நடந்து வருகிறது. இதில் இந்திய அணி 'சி' பிரிவில் வங்காளதேசம், ஹாங்காங் மற்றும் சிங்கப்பூர் ஆகிய அணிகளுடன் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் மேகாலயா தலைநகர் ஷில்லாங்கில் நேற்றிரவு நடந்த ஆட்டத்தில் இந்தியா வங்காளதேசம் அணிகள் மோதின. இரு அணிகளும் சரி சம பலத்துடன் மோதியதால் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டம் 00 என்ற கோல் கணக்கில் சமனில் முடிந்தது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.